இந்த நாள்

- பராபவ வருடம் சித்திரை மாதம் 5-ம் நாள். சனிக்கிழமை. வளர்பிறை.
- திதி: பிரதமை பகல் 2.11 மணி அதன் பிறகு துவிதியை.
- நட்சத்திரம்: அஸ்வினி காலை 9.42 மணி வரை; அதன் பிறகு பரணி.
- யோகம்: சித்தயோகம். ▸ சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்
- நல்ல நேரம்: காலை 10.30 - 11.30; மாலை 4.30 - 5.30 மணி வரை.
- ராகு காலம்: காலை 9.00 - 10.30 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- சந்திராஷ்டமம்: அஸ்தம், சித்திரை.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
28 C / 82.4 F	17 C / 62.6 F	28 C / 82.4 F	17 C / 62.6 F

இன்று வெயில் சுட்டெரிக்கும்

ஊட்டி பள்ளி வாசலில் இஸ்லாமியர்களிடம்

காங்கிரஸ் வேட்பாளர் ராமசந்திரன் வாக்கு சேகரிப்பு

ஊட்டி சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ராமசந்திரன் திமுக நிர்வாகிகளுடன் இணைந்து பள்ளிவாசல்களில் வாக்கு சேகரித்தார்.

ஊட்டி, ஏப்.18: நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிடும் ராமசந்திரன் நேற்று ஊட்டி நகரில் உள்ள பள்ளி வாசல்களில் இஸ்லாமியர்களிடம் வாக்கு சேகரித்தார். ஊட்டி மெயின் பஜார் பகுதியில் பெரிய பள்ளி வாசல், பெடரேஷன் மற்றும் அப்பர்பஜார் பகுதியில் உள்ள பள்ளி வாசல்களில் வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து, காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ராமச்சந்திரன் பேசுகையில், ''இந்தியாவில் காங்கிரஸ் நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட கட்சியாக உள்ளது. காங்கிரஸ் கட்சி சிறுபான்மையின மக்களுக்கு எப்போதும் உறுதுணையாக இருந்து அவர்களை பாதுகாத்து வருகிறது.

சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகளை கேட்டு அதனை உடனடியாக நிறைவேற்றி வந்துள்ளது. தற்போது ஊட்டி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் நான் போட்டியிடுகிறேன்.

நான் வெற்றி பெற்றால், சிறுபான்மையின மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன். ஊட்டி நகரில் நிலவி வரும் பார்க்கிங் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்படும்.

ஊட்டி நகரமை சர்வதேச சுற்றுலா தலமாக மாற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஊட்டியில் சுற்றுலாவை நம்பியுள்ள சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும், தமிழக அரசின் பல்வேறு திட்டங்களும் உடனுக்குடன் பொதுமக்களுக்கு கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ள ரூ.8000 கூப்பன், கலைஞர் உரிமைத்தொகை உட்பட அனைத்து திட்டங்களும் ஊட்டி மக்களுக்கு கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஊட்டி நகரில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்'' என்றார்.

இந்த பிரசாரத்தின் போது, காங்கிரஸ் கட்சி தலைவர் நாகராஜ், வட்டார தலைவர் ஆன்ந்த், திமுக மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் வாணீஸ்வரி, கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பாஸ்கரன், மனித நேய மக்கள் கட்சி தலைவர் அபுதாகீர், எஸ்டிபிஐ உசேன், தேமுதிக நிர்வாகி மவுலானா உட்பட பலர் உடனிருந்தனர்.

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு

நீலகிரியில் 4 நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடல்

ஊட்டி, ஏப்.18: சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் வரும் 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை டாஸ்மாக் கடைகள் மூடப்படுகிறது. மேலும், வாக்கு எண்ணிக்கை தினமான மே மாதம் 4ம் தேதியும் டாஸ்மாக் கடைகள் மூடப்படுகிறது.

இது குறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் எப்.எல்.1 மதுபான சில்லறை விற்பனை கடைகள், எப்.எல்.ஏ கிளப் பார்கள், எப்.எல்.3 ஓட்டல் பார்கள் மற்றும் எப்.எல்.3ஏ ஆகியவற்றில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு எதிர்வரும் 21ம் தேதி அன்று காலை 10 மணி முதல் 23ம் தேதி (வாக்குப்பதிவு நாள்) அன்று நள்ளிரவு வரையில் டாஸ்மாக் கடைகள் மூடப்படுகிறது.

மேலும், மே மாதம் 4ம் தேதி (வாக்கு எண்ணிக்கை நாள்) அன்றும் எவ்வித மதுபானங்களும் விற்பனை செய்யப்படமாட்டாது.

மேற்படி நாளில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும். மேற்படி தினத்தில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. உத்தரவை மீறி எவரேனும் மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம், 1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அன்றைய தினங்களில் நீலகிரி மாவட்டத்தில் டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகள், கிளப்கள் மற்றும் ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் ஏதேனும் திறந்திருப்பதாக பொதுமக்களுக்கு தகவல் தெரியும்பட்சத்தில் அந்த விவரத்தை கீழ்க்காணும் தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம்.

கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு மற்றும் அமலாக்கம், ஊட்டி, (0423-2223802). உதவி ஆணையர் (ஆயம்) ஊட்டி, (0423-2443693) மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்), எடப்பள்ளி, குன்னூர் (0423-2234211). இவ்வாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியுள்ளார்.

காவலர், போக்குவரத்து ஊழியர்கள்

தபால் வாக்கு செலுத்தும் நடைமுறை துவங்கியது

நீலகிரி மாவட்டத்தில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் காவலர்கள் மற்றும் போக்குவரத்து ஊழியர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் நடைமுறைகள் நேற்று துவங்கியது. அடுத்தபடம்: தாலுகா அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பெட்டியில் தபால் வாக்கை செலுத்தும் காவலர்.

2319 பேர் வாக்கு செலுத்த உள்ளனர்

ஊட்டி, ஏப்.18: நீலகிரி மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளில் அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் போக்குவரத்து ஊழியர்கள், காவலர்கள் தபால் வாக்கு செலுத்துவதற்கான நடைமுறைகள் துவங்கியது. நீலகிரியில் 2319 பேர் தபால் வாக்கு செலுத்த உள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி அனைத்து தரப்பினரும் தங்களது வாக்குகளை செலுத்திட வழிவகை செய்யும் வகையில் அத்தியாவசிய சேவைகளில் பணிபுரியும் ரயில்வே, வனொலி, இந்திய விமான நிலைய ஆணையம், தொலைதொடர்பு துறை, ஊடகவியலாளர்கள், தமிழ்நாடு போக்குவரத்து கழகம், மின்சார வாரியம், காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை உள்ளிட்டோர் தபால் வாக்குகள் செலுத்திட ஏதுவாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளிலும் 2319 பேரிடம் படிவம் 12டி பெறப்பட்டது.

இவர்கள் வாக்களிக்க ஏதுவாக ஊட்டி தொகுதிக்கு ஊட்டி வட்டாட்சியர் அலுவலகத்திலும், கூடலூர் தொகுதிக்கு தாமஸ் மேல்நிலைப்பள்ளியிலும், குன்னூர் தொகுதிக்கு சார் ஆட்சியர் அலுவலகத்திலும் தபால் வாக்கு மையம் அமைக்கப்பட்டிருந்தது. இவர்கள் 17ம் தேதி துவங்கி 19ம் தேதி வரை தபால் வாக்குகள் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் காவலர்கள், போக்குவரத்து ஊழியர்கள் உள்ளிட்டோர் நேற்று முதல் தபால் வாக்கு அளிக்கும் பணிகள் துவங்கியது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்கள், தேர்தல் நாளன்று பணிபுரியவிருக்கும் பணி ஆணை ஆகியவற்றினை காண்பித்து தங்களது தபால் வாக்குகளை அளித்தனர்.

இது குறித்து தேர்தல் பிரிவு அலுவலர்கள் கூறுகையில், ''தேர்தல் பணியில் ஈடுபடும் காவலர்கள், போக்குவரத்து ஊழியர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் பணிகள் நேற்று முதல் துவங்கியுள்ளது.

வரும் ஞாயிற்றுகிழமை வரை வாக்கு செலுத்தலாம். 2319 பேர் தபால் வாக்கு செலுத்த விருப்பம் தெரிவித்து படிவம் வழங்கியுள்ளனர். இவர்கள் 23ம் தேதியன்று நேரடியாக வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாது'' என்றனர்.

100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னூர் ஜெகதளா பகுதியில் தேர்தல் பிரசுரங்களை வழங்கி வாக்காளர்களுக்கு வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஊட்டி, ஏப்.18: நீலகிரி மாவட்டத்தில் கடந்த தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்த 3 தொகுதிகளிலும் உள்ள 13 வாக்குச்சாவடிகள் உட்பட பகுதிகளில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக இளம் வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நீலகிரி பூச்சிப்பிடிப்பான் (நீலகிரி பிளைகேட்ச்சர்) சின்னம் வெளியிடப்பட்டுள்ளது.

சின்னத்துடன் மலையின் குரல், நம் வாக்கு! என்ற விழிப்புணர்வு வாசகம் இடம் பெற்றுள்ளது. சின்னத்திற்கு நீலா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 3 சட்டமன்ற சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இளம் வாக்காளர்கள் மற்றும் வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கடந்த தேர்தலின் போது ஊட்டி தொகுதியில் 5 வாக்குச்சாவடிகள், கூடலூர் தொகுதியில் 2 வாக்குசாவடிகளிலும், குன்னூர் தொகுதிகளில் 6 வாக்குசாவடிகளிலும் என 13 வாக்குசாவடிகளில் குறைந்த வாக்குகள் பதிவானது கண்டறியப்பட்டது.

இப்பகுதிகளில் வாக்குசாவடி நிலை அலுவலர்களின் மூலம் கருத்துகள் பெறப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டது. இதுதவிர அனைத்து பகுதிகளிலும் ரங்கோலி கோலம், சிலம்பாட்டம், விழிப்புணர்வு சைக்கிள் பேரணி, கலாச்சார நிகழ்ச்சிகள், மாரத்தான் ஓட்டம், கிரிக்கெட் போட்டி, ஓவியம், கட்டுரை போட்டிகள், பழங்குடியின கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கோடை சீசன் முடியும் வரை

ஊட்டி நகருக்குள் பகல் நேரம் லாரிகள் செல்ல தடை விதிக்க மக்கள் கோரிக்கை

ஊட்டி,ஏப்.18: கோடை சீசன் முடியும் வரை ஊட்டி நகரில் பகல் நேரங்களில் லாரிகள் செல்வதற்கு தடை விதிக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கோடை சீசனை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ளது.

சுற்றுலா பயணிகள் வாகனங்கள் அதிகளவு தற்போது வரும் நிலையில், ஊட்டி - குன்னூர் சாலையில் லவ்டேல் சந்திப்பு முதல் சேரிங்கிராஸ் வரை நாள்தோறும் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

அதேபோல், பூங்கா செல்லும் சாலை, கலெக்டர் அலுவலகத்தில் இருந்து சேரிங்கிராஸ் செல்லும் சாலையிலும் வாகன நெரிசல் ஏற்படுகிறது.

மேலும், கமர்சியல் சாலையிலும் வாகன நெரிசல் ஏற்படுகிறது. இந்நிலையில், ஊட்டி நகருக்குள் வேகமாக வரும் தண்ணீர் லாரிகள், ஆங்காங்கே நிறுத்திக்கொண்டு தண்ணீர் இறக்குவதாலும் போக்குவரத்து பாதிக்கிறது.

சரக்கு லாரிகளும் பகல் நேரங்களில் அதிகம் வருவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

எனவே, கோடை சீசன் முடியும் வரை ஊட்டி நகருக்குள் சரக்கு லாரிகள், தண்ணீர் லாரிகள் பகல் நேரங்களில் வருவதற்கு தடை விதிக்க வேண்டும். இரவு நேரங்களில் மட்டும் தண்ணீர் லாரிகள் சென்று வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சுற்றுலா ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வாக்கிங் சென்ற பெண் விபத்தில் பலி

பாலக்காடு, ஏப்.18: திருச்சூர் மாவட்டம் வடக்காஞ்சேரி அருகே அகமலை பகுதியை சேர்ந்த கிருஷ்ணன் மனைவி லீலா (55). இவர் நேற்று முன்தினம் மாலை வடக்காஞ்சேரி சாலையோரம் வாக்கிங் சென்றார்.

அப்போது திருச்சூரிலிருந்து ஷொர்ணூர் நோக்கி கார் ஒன்று வந்தது.

எதிரே பைக்கில் வடக்காஞ்சேரி அடுத்த தோணூர்குன்று பகுதியைச் சேர்ந்த ஜெயகிருஷ்ணன் (19), இவரது தாய் ஜலஜா (42) ஆகியோர் சென்று கொண்டிருந்தனர். அகமலை பகுதியில் வரும்போது பைக் மீது கார் மோதி நிலைதடுமாறி வாக்கிங் சென்ற லீலா மீது மோதியது.

இதில் லீலா, மற்றும் பைக்கில் வந்த தாய், மகன் ஆகிய 3 பேரும் பலத்த காயமடைந்தனர்.

அங்கிருந்தவர்கள் மற்றும் போலீசார் 3 பேரையும் மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி லீலா பரிதாபமாக உயிரிழந்தார். மற்ற இருவரையும் மேல் சிகிச்சைக்காக திருச்சூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து வடக்காஞ்சேரி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்தால் வடக்காஞ்சேரி டவுனில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்பரேட் அலுவலகம்– சோழா க்ரெஸ்ட், சி 54& சி 55, சூப்பர் B–4, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு.

மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு (மின்-ஏலப்புள்ளி மூலம் மட்டுமான விற்பனை)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9 (1) இன் கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் / உரிமை அளிக்கப்பட்ட, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் நிரல் (C) இல் விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, நிரல் (D) இல் விவரிக்கப்பட்டவாறு சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. அவை கீழே கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன்மூலம் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு, சட்டப்பூர்வ பிரதிநிதிகள் (தெரிந்த அல்லது தெரியாத), செயல்பிரதிநிதி(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்) மற்றும் உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 9(1) கீழ் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விரிவான விற்பனை விதிமுறைகள் & நிபந்தனைகளுக்கு, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in ஆகியவற்றில் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

	[A]	[B]	[C]	[D]	[E & F]	[G]
வ. எண்	கடன் கணக்கு எண்/ கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)பெயர்கள்	மீட்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் (கடனீட்டுக்கடன்கள்)	அசையாச் சொத்து / கடனீட்டுச் சொத்து விவரம்	சுவாதீனம் வகை	நிர்ணயவிலை(₹ இல்) / முன்வைப்புத்தொகை (₹இல்)	ஏலம் நாள் மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்:HL04CIO000002922 1. அஷ்ரப் அலி K 2. ரோஷ்மா K வ.எண்.1 & 2 இன் முகவரி: 7, அம்மன் கோவில் பிரதான சாலை, வசந்தம் நகர், குனியமுத்தூர், கோயம்புத்தூர், பெட்ரோல் பங்க் அருகில், கோயம்புத்தூர் தெற்கு, 641008.	18.01.2024 தேதியன்று ரூ.46,69,253/– (ரூபாய் நாற்பத்தாறு லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்)	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், இணை–II சார் பதிவு மாவட்டம், குனியமுத்தூர் கிராமம், S.F.No.582/1 இல் உள்ள 1.04 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் மனை எண்.7 கீழ்வரும் எல்லைகள் மற்றும் அளவீட்டில் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கில்: 20 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, மேற்கில்: மனை எண்.7 இன் கிழக்கு பகுதி, தெற்கில்: S.F.No.581/1 இல் உள்ள பிரதீப்பின் நிலம், கிழக்கில்: மனை எண்.6, இதனிடையில் அளவீடு: கிழக்கு மேற்கு இருபக்கங்களிலும் – 20 அடி, வடக்கு தெற்கு இருபக்கங்களிலும் 60.0 அடி ஆக மொத்த அளவீட்டின்படி 1212 சதுர அடி பரப்பளவு உள்ள காலி நிலமும் அதனுடன் தரைத்தளம் மற்றும் முதல்தளத்தில் கட்டப்பட்டுள்ள ஆர்சிசி கட்டிடம் மற்றும் மின்சாரம்& தண்ணீர் இணைப்பு, அவற்றுக்குரிய வைப்புத் தொகைகள் மற்றும் அனைத்து பிற வசதிகளும் பயன்பாட்டு உரிமைகளும் உள்ள சொத்து. கதவு எண்.87/7, மதிப்பீட்டு எண்.21665, sc No.1717&WTC No.8712667.	கையக சுவாதீனம்	ரூ.49,15,040/– (ரூபாய் நாற்பத்து ஒன்பது லட்சத்து பதினைந்தாயிரத்து நாற்பது மட்டும்) ரூ.4,91,504/– (ரூபாய் நான்கு லட்சத்து தொன்னூற்று ஒராயிரத்து ஐந்நூற்று நான்கு மட்டும்)	07.05.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (ஒப்பந்தப்புள்ளி ஆவணம் விதிமுறைகளில் தலா 5 நிமிடங்கள் தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)
	சொத்து பார்வையிடும் நாள் & நேரம்: 05.05.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை			குறைந்தபட்ச ஏலம் உயர்த்தும் தொகை ₹10,000/–		
	ஏலப்புள்ளி / முன்வைப்புத்தொகை / பங்கேற்பதற்கான விண்ணப்பக் கடிதம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 06.05.2026 மாலை 5 மணி வரை.					

* அதற்கான பணப்பட்டுவாடா மற்றும் / அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள் ஏனையவற்றுடன், கடன் ஒப்பந்தத்தின்படி பொருந்துமாறு மேற்கொண்டு வட்டியுடன். சொத்தைப் பார்வையிடுதல் அல்லது ஏல ஆவணத்தைப் பெறுதல் மற்றும் மேலும் ஏதேனும் பிற வினாக்களுக்கு சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரி 1. சுரேஷ் D, கைபேசி எண்.8124483887 மற்றும் மின்னஞ்சல்: sureshdurairaju@chola1.murugappa.com, 2. கோபிகிருஷ்ணன்.J கைபேசி எண்.9003366333 மற்றும் மின்னஞ்சல்: gopikrishnanj@chola.murugappa.com/ மூலம் தொடர்பு கொள்ளவும். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில் மேற்கூறிய அசையாச் சொத்துகள்/ கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான வில்லங்கங்கள் எதுவுமில்லை.

ஒம்/–

நாள்: 17.04.2026
இடம்: கோயம்புத்தூர், தமிழ்நாடு

அதிகாரப்பூர்வ அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்காக

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014.கிளை அலுவலகம் அலகு: கல்யாணி டவர், எண்.21 A/C, கபுர்கான் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு - 642126.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 19.05.2026 தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதள அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். LAP0610200000005040723 மணிகண்டன் பழனிசாமி (கடன்தாரர்), சரஸ்வதி பழனிசாமி (உப கடன்தாரர்) பழனிசாமி மாசாணி போயன்	அறிவிப்பு தேதி: 08.08.2025 08.08.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.7,99,379/– (ரூபாய் ஏழு லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து முந்நூற்று எழுபத்தொன்பது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 19.35% வட்டி.	கையக	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை துணை பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், கோட்டூர் கிராமம், S.F.No.38/A1 , ராஜீவ் காந்தி நகர், மனை எண்.18 இல் உள்ள 48 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கில்: தெற்கு வடக்கு தெரு, தெற்கில்: மனை எண்.19, மேற்கில்: மனை எண்.33.	Rs. 950732.00/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று முப்பத்திரண்டு மட்டும்)	ரூ. 95073.20/– (ரூபாய் தொன்னூற்று ஐந்தாயிரத்து எழுபத்து மூன்று மற்றும் பைசா இருபது மட்டும்)	18-05-2026 Before 5 PM	10,000/-	13-05-2026 (11AM – 4PM)	19-05-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், சூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் பரஸ்ட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சசீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 18.05.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை அலுகு: கல்யாணி டவர், எண்.21 A/C, கபுர்கான் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு – 642126, கைபேசி எண். +91 8281138143, மின்னஞ்சல் முகவரி: p.adith@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும், மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 18.04.2026 இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்